## DEPOSITION OF WITNESS

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.254/2020.
Prosecution witness for P.W. 13.

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. சண்முகராஜ்.** | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.09.2025.

A1 to 5 present.

முதல் விசாரணை

நான் தற்போது ஏரல் வட்டம் நட்டாத்தி கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு மாறமங்கலம் கிராம நிர்வாக அலுவலராக பணியில் இருந்தபோது 14.11.2019 அன்று மதியம் 2 மணியளவில் ஆய்வாளர் சொன்ன தகவலின்பேரில் நானும், என் உதவியாளர் முத்துப்பாண்டி என்பவரும் சம்படி விலக்கு அருகில் காரில் சென்றோம். அங்கு 1, 2 எதிரிகளை போலீசார் கைது செய்து வைத்திருந்தார்கள். அப்போது 1, 2 எதிரிகள் தாங்களாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை போலீசார் எங்கள் முன்பாக பதிவு செய்து எங்களிடம் கையொப்பம் பெற்றார்கள். 1ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ 4**. 2ம் எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ 5.** அ.சா.ஆ 4 ன் அடிப்படையில் 1ம் எதிரி எங்களை மாறமங்கலத்தில் செந்தூரான் என்பவர் வீட்டிற்கு பின்புறமாக அழைத்துச் சென்று அங்கு புதரில் ஒளித்து வைத்திருந்த கத்தியை ஆஜர் செய்ததை போலீசார் மகஜரில் எங்கள் முன்பாக கைப்பற்றி எங்களிடம் கையொப்பம் பெற்றார்கள். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ 6**. அந்த கத்தி ஏற்கனவே குறியீடு

செய்யப்பட்ட சா.பொ1. அ.சா.5ன் அடிப்படையில் 2ம் எதிரி எங்களை மாறமங்கலம் ஊரின் தென்புறமாக பாலகிருஷ்ணன் வகையறா தோட்டத்தில் ஒரு இடத்தில் மறைத்து வைத்திருந்த நான்கு கம்புகளை ஆஜர் செய்தததை போலீசார் எங்கள் முன்பாக மகஜரில் கைப்பற்றி எங்களிடம் கையொப்பம் பெற்றார்கள். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ 7**. மேற்படி கம்புகள் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்ட சா.பொ.2 முதல் 5. ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

1 முதல் 3 மற்றும் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

சம்பவம் நடந்த பகுதியும் மாறமங்கலம்தான். எதிரிகள் சுற்றிக் கொண்டிருந்த பகுதியும் மாறமங்கலம்தான். எதிரிகள் கைது செய்யப்பட்டதாக சொல்லப்படும் இடம் நிலையத்திலிருந்து சுமார் 6 கி.மீ துாரத்தில் உள்ளது. அந்தஇடம் சம்பவ இடத்திலிருந்து சுமார் 3 கிமீ துாரத்தில் உள்ளது. மதியம் 2 மணியளவில் கைது செய்யப்பட்டார்கள். சீருடையில் இருந்த போலீசாருடன்தான் நான் சென்றேன். எதிரிகள் இருந்ததை முதலில் 200 மீட்டர் துாரத்தில் இருந்து பார்த்தேன். நாங்கள் அருகே செல்லும் வரையில் எதிரிகள் அங்கேயேதான் இருந்தார்கள். போலீசாரை கண்டதும் அவர்கள் ஓடவில்லை. சா.பொ1 முதல் 5 ஆயுதங்களுக்கு குறிப்பிட்ட அடையாளம் கிடையாது. சா.பொ1 முதல் 5ல் ரத்தக்கறை கைப்பற்றும்போது இல்லை. நாங்கள் போகும்போது மேற்படி செந்துாரான் வீட்டில் இருந்தாரா என்றால் ஞாபகமில்லை. பாலகிருஷ்ணன் தோட்டத்தில் கம்புகளை கைப்பற்றும்போது பாலகிருஷ்ணன் அங்கு இல்லை. கைப்பற்றுதல் மகஜர்களில் கையொப்பம் பெறுவதற்கு மேற்படி செந்துாரானோ, பாலகிருஷ்ணனோ அங்கு இல்லை. சா.பொ1 முதல் 5 பொருட்கள் பொதுவாக அனைவர் வீட்டிலும்

கிடைக்கக்கூடியவை என்றால் சரிதான். பாலகிருஷ்ணன் தோட்டத்தில் கைப்பற்றப்பட்டதாக எழுதப்பட்ட மகஜரில்தான் நான் கையொப்பமிட்டேனா என்றால் அவரது மகனான 2ம் எதிரி தோட்டத்தில் கைப்பற்றப்பட்டதாக எழுதப்பட்ட மகஜரில் கையொப்பமிட்டேன். ஒரு சம்பவத்தை செய்துவிட்டு இரண்டே நாட்களில் அந்த பகுதியிலேயே 1, 2 எதிரிகள் இருந்ததாகவும், போலீசாரை கண்டதும் அவர்கள் ஓடாமல் இருந்ததாகவும், அவர்கள் ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்ததாகவும் அதன் அடிப்படையில் சா.பொ1 முதல் 5 ஆயுதங்களை கைப்பற்றியதாக சொல்வது இயல்புக்கு முரணாக உள்ளது என்றால் தவறு. போலீசார் நிலையத்தில் தயார் செய்த ஆவணங்களில் நாங்கள் கையொப்பமிட்டோம் என்றால் சரியல்ல. சா.பொ.1 முதல் 5 நிலையத்திலேயே இருந்தன என்றால் சரியல்ல. நான் அரசு ஊழியர் என்பதால் போலீசார் கேட்டுக் கொண்டதற்கிணங்க பொய்சாட்சி சொல்கிறேன் என்றால் சரியல்ல.

4ம் எதிரி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN Digitally signed by M THANDAVAN Date: 2025.09.01 18:32:55 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.

**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.254/2020.

Prosecution witness for P.W. 14.

| | | | |
|---|---|---|---|
| Name | ... திரு. அஜித் குமார். | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 01.09.2025.

A1 to 5 present.

முதல் விசாரணை

நான் தற்போது குரும்பூரில் குடியிருந்து ஏரலில் இருசக்கர உதிரி பாகங்களை விற்கும் கடையில் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ரசீது நான் கொடுத்த ரசீதுதான். அதை எப்போது கொடுத்தேன் என்று ஞாபகமில்லை. அந்த ரசீதை என் வாடிக்கையாளருக்குத்தான் கொடுத்தேன். முகப்பு விளக்கிற்கு மேல்பகுதியில் உள்ள வைசர், முகப்பு விளக்கு டூம், முகப்பு விளக்கு, கிளட்ச் லிவர், பிரேக் லிவர், முகப்பு விளக்கு கிரில், முகப்பு விளக்கு கம்பி, முன்புற போர்க் ரேசர், ஸ்பீடோ மீட்டர் பெட்டி ஆகியவற்றை மாற்றிக் கொடுத்ததற்காக ரூபாய் 2,215/- கட்டணமாக பெற்றுக் கொண்டு நான் மேற்படி ரசீதை வழங்கினேன். அந்த ரசீது **அ.சா.ஆ 8**. வாடிக்கையாளரின் பெயர் எனக்கு ஞாபகமில்லை.

1 முதல் 3 மற்றும் 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

அ.சா.ஆ 8 ல் வாடிக்கையாளரின் பெயரோ, முகவரியோ குறிப்பிடப்படவில்லை. ரசீது தேதி குறிப்பிடப்படவில்லை. போலீசார் கேட்டதால் வழங்கினேன் என்றால் சரிதான். அதில் பதிவெண்ணும் இல்லை.

4 ம் எதிரி தரப்பில் மேற்படி குறுக்கு விசாரணை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

M THANDAVAN
Digitally signed by M THANDAVAN
Date: 2025.09.01 18:33:01 +0530

I Additional District & Sessions Judge,
Thoothukudi.